# செவ்வானம்

ஐப்பசி 2007 | ஆரம்பம் : புரட்டாதி 2002 | இதழ் : 20 | இலவசம்

## மாற்றம் வேண்டும்

எமது சமுதாயத்தில் பல வருடங்களாக பண்பாட்டு முறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இதன் வழியாக அற்றோம், திருநாட்கொண்டாட்டங்கள், அருட்சாதன வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் ஆகியன இடம் பெற்று வருகின்றது.

இதற்கு மாறக மனிதனின் துன்ப நிலைகளுடன், மரணச்சடங்கும் அனுஷ்டிக் கப்பட்டு வருகின்றது. காலப்போக்கில் மனித சிந்தனைகள் மாற்றமடைந்து வருவதை பலர் விரும்புகிறார்கள். சிலர் நடைபெற்று வருவதை மாற்றம் செய்யாது காப்பது அவசியம் எனக்கொள்கின்றர்கள்.

இதன் அடிப்படையில் மாற்றங் களை சிந்திக்கவும்,தேவையற்ற முறைமை களை நீக்கவும் நலன் விரும்பிகள், சமூக சேவையாளர்கள் நினைத்தும் அதனை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது ஏன்?

முன்னைய நடைமுறைகளுக்கு மாறாக இக்காலகட்டத்தில் விலைவாசி, ஆரோக்கியமற்ற நிலைகள் வேறு பல நெருக்கீடுகளில் இடம்பெறும் மரணச் சடங்குகளை நோக்குவோம்.

முன்பு மரணித்தவரை குதிரை வண்டியில் வைத்து கத்தோலிக்க குரவர்கள் லத்தீன் மொழியில் பாடி, செபம் செய்து சேமக் காலைக்கு பக்தியாக மரண ஊர்வலமாக எடுத்துச் சென்றதைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. இப்போது கத்தோலிக்க மரபற்ற செயற்பாடுகளுடன் கூடிய ஊர்வலமும் நடைபெறுகிறது.

மேலும், ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்கு கொள்ளாது கோயில் படிகளில் இருத்தல்,செபம் - பக்தி குறைந்த நிலையில் மரண ஊர்வலங்கள் செல்லுதல், வெறுப்பூட்டும் பாண்ட் வாத்தியங்கள் போன்ற நிகழ்வுகளே நடைபெறுகின்றன. இவற்றை நல்ல முறையில் நெறிப்படுத்துதல் அவசிய மாகும். அத்துடன் சேமக்காலையில் நல்லடக்கம் முடிந்ததும் உறவினரைவிட ஏனையோர்கள் திரும்பவும் வீட்டிற்கு சமூகம் கொடுக்காது தத்தமது விருப்பத்திற் கேற்றவாறு செல்லலை நடைமுறைப் படுத்துவதை '**குறைகாண்**' நிலைக்கு மக்கள் உட்படுத்தாமல் இருக்க வேண்டும்.

### மல்லிகை முற்றம்

முற்றத்தில் மல்லிகை
மணவாளன் வரவுக்காய்
காத்துக்கிடக்க
மறவன் மணவாளன்
மண்ணைக் காப்பதில்
உயிரைத் துறக்க
மயங்கிய மல்லிகை
மணவாளன் மகனை
பெற்றெடுக்க மாசற
மாற்றான் படை வந்து
மகன் தன்னை மார்க்கண்டேன்
கொண்றொழிக்க
ஈரெட்டு ஆண்டடுத்து
மணவாளன் விட்ட பணியில்
மல்லிகை மலர்ந்திட
வாசம் வீசும் தமிழ்த்
தாயகத்தில் மெல்ல...!

– குருகுலப்பாரதி

13.11.1993 இல் நிகழ்ந்த விமானக் குண்டுத் தாக்குதல் நினைவாக...





குண்டுகள் வீசிக் குதறிட்ட போதும்
கரத்தின் உழைப்பால் மீள வுயர்ந்து
குன்றா அழகுடன் நின்றொழி தரும்
குருநகர் புனித யாகப்பர் ஆலயம்


"அவன் புண்ணியவான் றோட்டுக்கரையில நல்ல நிழல் மரமா வைச்சிருக்கிறான" என்று மனவல் சொல்ல.
"ஆறு மாசம் போனா நாம அதுக்கு கீழ இருந்து காட்ஸ் விளையாடலாம்" என்கின்றான் சந்தியா.
"எல்லையை கூட்டுவதற்கு அத்திவாரம் போட்டுட்டான். இது உங்களுக்கு விளங்கயில்ல" டோமினிக் வெறுப்புடன் சொல்ல...
"உனக்கு எப்பவுமே குத்திப் பாக்கிற புத்திதான் வரும். அவன்ர சமூகத் தொண்டை புழுகாட்டியும் பரவாயில்ல... கேவலமாக கதைக்காத" என்கின்றான் சந்தியா.
"அவன்ர காதிலே கேட்டா இண்டைக்கு உனக்கு சம்பலும் சோறுதான" சற்றுப் பயத்துடன் மனவல் சொல்ல,
"எப்பவுமே நம்மட ஆக்களுக்கு புரியாது பிறகு ஒரு நேரத்தில அறிய வரேக்க நான் சொன்னதை சரியென நினைப்பாங்க ஆனா அப்ப நிலமை மாறி எதுவுமே செய்யமுடியாதிருக்கும்" டோமினிக் மனதிற்குள் சொல்லிக்கொள்கிறான்.

## இது கதையல்ல...

வீட்டுக்காரனின் அளவுகடந்த ஆசைமாதிரி கத்தாப்பு மரமும் வளர்கிறது. மரத்தை ஆடு மாடுகள் காந்தாமல் வலை சுற்றி அடைக்கப்பட்டது.
தொலை நோக்குடன் இடையிடையே தடிகள் ஊன்றப்பட்டு சாணி பூசியதை எவருக்குமே பெரிதாக நினைக்கவுமில்லை, அலட்டிக் கொள்ளவுமில்லை.
கத்தாப்பு நிழலில் இருந்து காட்ஸ் விளையாடுபவர்களுக்கு குடிக்க தண்ணீரில் இருந்து பீடி பத்த நெருப்பு வரை வீட்டுக்காரரால் சப்ளை செய்யப்படுகிறது.
பின்னொரு நாள் இரவு மடிந்து விடிந்த போது 20 அடி அகலமாயிருந்த றோட்டு 15 அடியாகியிருந்தது.
"அனைத்தும் முடிந்து விட்டது" டோமினிக் வாய்விட்டு சொல்கிறான்.

**S.N.J. மரியாம்பிள்ளை**

## பதிவுகள்



"படை வெட்டு" நாட்டுக் கூத்து புனித யாகப்பர் கலை மன்றத்தால் 26.7.2003ம் ஆண்டு குருநகர் கலையரங்கத்தில் மேடையேற்றப்பட்டது.

'செவ்வானம்' இலவச இதழில் பிரசுரிக்கக்கூடிய ஆக்கங்களை – தகவல்களை, நீங்கள் எழுதி அனுப்பவேண்டிய முகவரி

ஆசிரியர் 'செவ்வானம்'
பணிமனை,
சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம்
அடப்பன் விதி, 1ம் ஒழுங்கை,
குருநகர், யாழ்ப்பாணம்.

## சமூக வலம் 1



### வஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

03-08-1928 இல் பிறந்த இவர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலத்தில் 5ம் வகுப்பு வரை கல்வி பயின்றார். பல பக்திச் சபைகளில் பணியாற்றினாலும் குருநகர் உத்தரிய மாதா ஆலய கூட்டுச்சபையில் பணியாற்றும் காலகட்டத்தில்தான் இவரது சேவை வெளிப்படலாயிற்று. இவரின் சேவையை பாராட்டி பீத்தை, தங்க, வெள்ளி, வரவணிக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டவராவர்.

மாதா சபையில் 1974ம் ஆண்டிலும் பின்பு 1983 தொடக்கம் இற்றை வரையும் தலைவராக இருந்தும் வருகிறார். இக்காலகட்டத்தில் இவரதும், நிர்வாகத்தினதும் அளப்பரிய முயற்சியால் பழைய மண்டபம் புதிதாக புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மற்றும், 1982ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஆலயத்தின் தவக்கால ஆசந்தி வழிபாடுகளை திறமையாக செயற்படுத்தியும் வருகின்றார்.

1974ம் ஆண்டு தொடங்கி தொடர்ந்து 8 வருடங்கள் சிறகுவலைச் சங்கத்தின் தலைவராக இருந்து சேவையாற்றிய காலத்தில், சங்கத்தின் யாப்பை வரைந்தும், ஊருக்கு ஊர் ஒவ்வொரு நிறத்தால் வலைகளில் பெயர் எழுதும் முறையைக் கொண்டுவந்தும், வலைக் களவையும் ஒழிக்கவும் முன்னின்றுழைத்தவர். கடற்றொழில் மேற்பார்வையாளரோடு விடா முயற்சியுடன் தொடர்பு கொண்டு இயந்திரத்துடன் கூடிய 10 லோன் படகுகளைப் பெற்றுக்கொடுத்தவர்.

1977ல் நைலோன் வலைச் சங்கத்தின் உறுப்பினராக செயல்பட்டகாலத்தில் குத்தகைகாரர் தொழிலாளிகளுக்கு இழைத்த அநீதியை எடுத்துக்காட்டி தொழிலாளருக்க நீதி வழங்க உதவியராவார்.

**– நெவில்**

## ஆலமரத்தடி

விழுதுகள் தொங்கிடும் ஆலமரச் சந்தியது
ஐந்து வீதிகள் சேர்ந்து வரும் சந்தியது
அன்று கோச்சி வந்த பாதையது
இன்று சீட்டாடும் இடமாக மாறியதேன்?


கிழக்கே அறிஞர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அமரர்சிலை
மேற்கே கலை வளர்க்கும் பொன்னான கலையரங்கம்
தெற்கே பன்மொழிப்புலவர் அமரர் ஞானப்பிரகாசம்
வடக்கே சம்பேதுருவானவர் சிற்றாலயம்

மாலை நேரத்தில் இளைஞர் பெரியோர்கள்
ஊரின் விடியல் புதினம் அறியும் வேகத்துடன்
இளைஞர் பலரின் கூக்குரலின் ஒலியோடு
சுற்றி சுழன்றாடும் துவிச்சக்கர வண்டிகள்.

விமர்சனப் பார்வையில் வந்து விழும் வீண்கதைகள்
பொருந்தாத பொதுக்கதையும் வேண்டாத விடுகதைகள்
யாருக்கு உதவுமென்று அங்கவர்கள் நினைப்பாரோ
காற்றோடு கலந்துவிடும் அவை அனைத்தும் வீண்கதைகள்.

கூச்சலும் கும்மாளமும் எம்மிடம் குறைவில்லை
பசிக்கும் வயிற்றுக்கு புசிக்கவோ வழியில்லை
நசுக்கும் வேலை செய்ய நரிகளுக்கு எல்லையில்லை
வாழ்விற்கு வழி சமைக்க முன்வருவார் யாருமில்லை.

**– பாதிரி**




பட்டிமன்றம் தொடங்கியது.
கல்வியும் கலையும்
இரு அணிகளாய் திரண்டன.
மாறி மாறி இரண்டும்
தமது சாதனைகளை அடுக்கின
விவாதம் விறுவிறுப்பேற
பேச்சு நீளம் குறுகி
வசனங்களாய் மாறி
சொற்போர் தொடங்கியது.

நான் அறிவுள்ளவன் என்றது கல்வி.
அறிவோடு அழகும் எனக்குள்ளது என்றது கலை.

என்னிடம் தானே எழுத்துக்கள் உள்ளது என்றது கல்வி
உன் எழுத்தெல்லாம் என் ஓவியம் தானே என்றது கலை.

கல்வி:- ஓவியம் வரையவும் அறிவு தேவை
கலை:- கடல் மணலில் படம் வரையும்
நண்டுக்கு ஏது அறிவு.
கல்வி:- கற்றவன் மட்டுமே சிந்திக்க முடியும்
கலை:- கலைஞனுக்கு கற்பனையே வெற்றி.
கல்வி:- கற்பனை எல்லாம் மாயைகள்தானே.
கலை:- மாயைகளுக்கு உருக்கொடுப்பது கலைதானே.
கல்வி:- கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் மதிப்பு
கலை:- கலைஞனுக்கு உலகெல்லாம் இரசிகர்கள்.
கல்வி:- இரசிகர்கள் எல்லோரும் கற்றவர்கள் அல்ல
கலை:- கற்றவர்கள் எல்லோரும் கலைஞனும் அல்ல
கல்வி:- கலை வளர கல்வி தேவை
கலை:- மொழி இன்றி கல்வி வளராது
கல்வி:- மொழியும் கல்வியும் இரண்டல்ல
கலை:- மொழி இல்லாக்காலத்தில் கலை
அசைவுகளில் பேசியது.
கல்வி:- அசைவுகள் எல்லாம் மௌனம்தானே
கலை:- கலை மௌனமாகவும் பேசுமல்லவா
கல்வி:- இல்லை இது உன் விதண்டாவாதப் பேச்சு
கலை:- கலையின் வாதம் சரியென்றி பார் இந்த
சபையின் கைதட்டல்களே சாட்சி
கல்வி:- உன்னை இந்த மேடைக்கு அழைத்தது
கல்விதானே.
கலை:- கலைஞனுக்கு கால்பட்ட இடமெல்லாம்
மேடைதானே.
கல்வி:- நீ சிந்திப்பது கல்வியால்தானே
கலை:- என்னை சிறப்பித்தது கலையல்லவா
கல்வி:- என்ன நீ கல்விக்குள் கலையை
கலப்படம் செய்கின்றாய்.
கலை:- பாலுக்குள் தண்ணீரை கலந்தால்தானே
செம்பு நிறைய பால் என்பார்கள்

“போதும் உன் பேச்சு” என்று கோபித்தது கல்வி
“பார்த்தாயா உன் பேச்சின் இடையில் தாளம் உண்டு,
அதுவும் கலை” என்றது.

கல்வி:- நீ தாளம் போட நான் எண்களை தந்தேனே.
கலை:- உன் எண்ணிக்கை பிசகாமல்
நாங்கள் ஆடுகின்றோமே.
கல்வி:- இல்லை இதுதான் என்
இறுதிப்பேச்சு
நீ எழுதிய ‘அ’ கல்வி
நீ சொன்ன ‘அம்மா’ கல்வி
ஆடை தந்தது கல்வி
அகிலத்தை இயக்குவது கல்வி
இயந்திரம் உண்டு, இமயம் கண்டோம்
விமானம் கண்டு விண்ணை பிடித்தோம்
எங்கும் எதிலும் கல்விதனே.
கலை:- ஹ...ஹ...ஹ...
நான் ‘அ’ எழுத முன்பு அழுத
குரலில் இசை சேர்த்தேன்
இசையில் ஸ்வரம் சேர்த்தேன்
ஆடையில் அழகைத் தந்தேன்...
உன் பாடையில் நான் பாடினால் கலை
‘ஆ’ என்றால் ஆடுவதும் கலை
‘பா’ என்றால் பாடுவதும் கலை
தலைவாரி பூச்சூடினால் கலை
தனியே இருந்து கவிதை செய்தால் கலை
காற்று ,வானம், கடல், மழை, காடு
நீர், நிலம், தீ எல்லாமே கலை.
இயற்கையே கலை
இறைவன் கலை
காண முடியாத இறைவனை
கற்பனை செய்து
காகிதத்தில் கீறுவது கலை.
படித்தவனுக்கு மட்டுமே உன்
கல்வி சொந்தம்
கலை பாமரனுக்கும் சொந்தம்.
கல்வி:- போதும் போதும்
போட்டி வந்தால் நாம் தனித்துவிடுவோம்
நானும் நீயும் கைகோர்த்தால்தான்
மொழிகள் வாழும்
நாம் வாழ்ந்தால்தான்
தமிழும் வாழும்
சாகாத தமிழ் இன்னும்
சாதனை படைக்க
அழகுள்ள அறிவு தேவை
கலை:- ஆம்...
அழகான கலையையும்
அறிவுள்ள கல்வியையும்
மதிக்காத எவனும்
மனிதன் இல்லை
காரணம்...
நம் தாயும் தந்தையும்
கல்வியும் கலையும் தானே...

தயமிக
(அரு.பணி M.L.தயாகரன்)

# தகவல்கள்

## முதலுதவிப் பயிற்சி

குருநகர் சனசமூக நிலையத்தில் 09-08-2007 காலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவினரால் முதலுதவிப் பயிற்சி நடத்தப்பட்டது 25 பேர் இப்பயிற்சியில் பங்குபற்றினார்கள் இதற்கு பேராசிரியர் திரு.வி.கே. கணேசலிங்கம் அவர்களும் போதனா ஆசிரியர் திரு இலங்கேஸ்வரன் அவர்களும் கிராம சேவையாளர் ,நிலையத் தலைவர் ,நிர்வாகிகள்,நிலைய ஆசிரியர்களும் சமூகம் கொடுத்திருந்தார்கள். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்பட்டு மாணவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

## மீட்டல் பயிற்சி வகுப்பு

கார்மேல் மாதா இளைஞர் ஒன்றியத்தால் ஆவனி மாதாம் இரண்டாம் தவணைக்குரிய G.C.E O/L வகுப்பிற்கான மீட்டல் பயிற்சி வகுப்புகள் கார்மேல் மாதா மண்டபத்தில் நடைபெற்றது. 70 மாணவர்கள் பங்கு பற்றி பயன் அடைந்தார்கள். இதற்கான உதவிப் பணம் 5000/= ரூபா குருநகர் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

## துண்டுப் பிரசுரம்

நாட்டிலேற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக தொழிலிழந்து போதிய வருவாயிழந்து இருக்கும் மக்கள் நலன்கருதி 'அற்றோம்' வைப்பதை குருநகர்ஐக்கிய முன்னணி தடைசெய்திருந்தது. இருப்பினும் சிலர் ஒலிபெருக்கியைப் பயன்படுத்தி கொண்டாட்டங்களுக்கு அழைப்பு விடுக்கின்றனர். இது மறைமுக அற்றோம் அழைப்பாக மக்கள் கருதுவதால் அதனை நிறுத்தும்படியும் மீறுபவர்களின் கொண்டாட்டங்களை பொதுமக்கள் புறக்கணிக்கும்படியும் ஐக்கிய முன்னணியால் 03.10.2007 இல் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

## போதை அடிமைகளுக்கு

அரிவாள் தூக்குகின்றான்
அன்னைக்கு
அன்னியருக்காக...
அன்பு காட்டுவான் ?

சண்டிக்கட்டுகட்டுகின்றான்
தந்தைக்கு
சகோதரர்களிடமோ...
பாசம்,காட்டுவான்?

ஏய்!...
போதை அடிமைகளே !
வாழ்க்கையில் வழுக்கிவிட்டீர்கள்
முயற்சித்துப்பாருங்கள்
எழுந்து நடக்க
முயற்சித்தால் முடியும்

குடிகுடியை கெடுக்கும் இது
வாய்க்கொழுப்பு வார்த்தை அல்ல...
அனுபவ அறிஞர்களின் அமுதம்.

- வில்பிறட். யூனியா

# நூல் வெளியீடுகள்

எழுத்தாளர் 'அ. யேசுராசா' அவர்களின்

### குறிப்பேட்டிலிருந்து...

என்னும் இலக்கியக் கட்டுரைகளடங்கிய நூல் கடந்த 29.07.2007 ஞாயிற்றுக்கிழமை அன்று திருமறைக் கலாமன்ற 'கலைக்கோட்டம்' மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

'கலையார்வன்' அவர்களின்
10வது உருவாக்கமான

### குருதிக் குளியல்

என்னும் நூல் ஐரோப்பிய நாடுகளில் வெளியீடு செய்யப்படவுள்ளன.
இந்நூல் வேட்டை, அறுப்பு, அழிப்பு ஆகிய தலைப்புகளைக்கொண்ட துன்பியல் இலக்கியமாகும்.



# சிந்தியுங்கள்...

❖ இந்த உலகத்தில் தான் நம்மால் சிரிக்க முடியும் நரகத்தில் சிரிப்பே இருக்காது. சுவர்க்கத்தில் சிரிப்பது சரியானதாக இருக்காது.

ஜீல்ஸ் ரெனார்ட்

❖ எறும்பைப் போன்று யாராலும் சிறந்த அறிவுரையை சொல்ல முடியாது. ஆனால் அது எதுவும் சொல்லுவதில்லை.

பிராங்கிலின்

❖ சாபம் என்பது மேலே எறியப்பட்ட கல்லைப்போன்றது அது எறிந்தவன் தலைமீதே வந்து விழும்.

ஸ்கொட்

❖ நீங்கள் உண்மையை கூறி வருபவராக இருந்தால் எதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் உங்களுக்கு இருக்காது.

மார்க் ருவைன்

❖ சிந்தியாதவன் முட்டாள் சிந்திக்க துணியாதவன் கோழை சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக்காரன்.

பிரியாண்ட்

❖ சோம்பேறிகளின் நாக்கு சோம்பறியாய் இருப்பதில்லை.

தோம்ஸ் புல்லர்

❖ அதிஷ்டக்காரனை நதியில் தூக்கி எறிந்தால் அவன் வாயில் மீனோடு வருவான்.

வில்லிஸ்

❖ பேராபத்துக்களை இரண்டு வகையாக பிரிக்கலாம் நமக்கு ஏற்படும் துர்திஷ்டம் ஒரு வகை மற்றவர்களுக்கு கிட்டும் அதிஷ்டம் இன்னொரு வகை.

பியர்ஸ்

❖ குடிகாரன் ஒரு விஸ்கி பாட்டில் கழுத்தும் வயிறும் இருக்குமே தவிர தலையிருக்காது.

ஒஸ்ரின் ஓ மால்லி

❖ நீங்கள் உங்களைப் பற்றி எதுவும் பேசாதீர்கள் நீங்கள் சென்றவுடன் அனைவரும் அதைப்பற்றித்தான் பேசப் போகிறார்கள்.

அடிசன் மிக்னர்

- திலானி

குருநகர் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தினால் (ஆதரவு: சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்), இல. 28 மாட்டின் வீதியிலுள்ள 'ஜெயந்த் சென்றர்' இல் வடிவமைக்கப்பட்டு ஏ.சி.எம். அச்சகத்தில் அச்சிடப்பட்டது.